பக்கங்கள்: 08

காலைக்கதிர்
Kalaikkathir

விழியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 புரட்டாதி 19 ஞாயிற்றுக்கிழமை 05.10.2025 கதிர் 329

## இனி இது ரகசியம் அல்ல!

நேற்று என் பத்தியில் கூறிய விடயங்களையொட்டித்தான் இன்றும் சில விடயங்களைப் பதிவு செய்யப் போகின்றேன். எதிர்க் கட்சிகளின் கூட்டுத் ☞2

# ‘அஸ்வெசும’ உதவித் திட்டத்தை நிறுத்த ஆளும்தரப்பு மும்முரம்

## எதிர்க் கட்சித் தலைவர் தெரிவிப்பு

‘அஸ்வெசும’ சமூகப் பாதுகாப்புத் திட்டத்தை விரைவில் நிறுத்துவதற்கு ஆளும்தரப்பு திட்டமிட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர்சஜித்பிரேமதாசநேற்றுத் தெரிவித்தார்.

அனுராதபுரத்தின் தலாவாவில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசிய பிரேமதாச, ‘அஸ்வெசும’ திட்டம் இலங்கை மக்களிடையே வறுமையைக் குறைக்கத் தவறிவிட்டது என்ற குற்றச்சாட்டையும்முன்வைத்தார்.

இலங்கையில் வறுமை ஒழிப்புக்காக நீண்டகாலமாக நடைமுறையில் இருந்து வந்த சமுர்த்திஉதவித்திட்டத்தைரணில் விக்கிரமசிங்கஅரசுத்தலைவரான பின்னர்மாற்றினார்.பொருளாதார நெருக்கடியினால்ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின்பின்னர்,பொருளாதார நெருக்கடிக்குள்ளாகிய மக்களுக்கு உதவும் வகையில் ‘அஸ்வெசும’ திட்டத்தை ரணில் அறிமுகப்படுத்தினார்.

இந்தத் திட்டத்தின் கீழ் ☞2

## மின்சாரம் தாக்கியதில் காட்டு யனை இறப்பு

பொலன்னறுவைவிவசாயத்திணைக்களத்தின் விதைப் பண்ணை அருகே காட்டு யானை ஒன்று உயிரிழந்துள்ளது. பண்ணையின்பாதுகாப்புக்காகப் போடப்பட்ட மின்சார வேலிகளில் முட்டி மின்சாரம் தாக்கியதால் இந்த யானை உயிரிழந்திருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஒரு நபரிடமிருந்து கிடைத்த தகவலின் அடிப்படையில், சம்பவம் குறித்து பொலன்னறுவை வனவிலங்குஅதிகாரிகளுக்குயானையின்இறப்புக் குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது. உடற்கூறாய்வின் பின்னரே யானையின் இறப்புக்கான சரியான காரணம் தெரியவரும் என்று பொலன்னறுவை தலைமையகக் பொலிஸ் இன்ஸ்பெட்டர் பத்திரண தெரிவித்தார்.

நியூடவுன்சாலையில்உள்ளபொலன்னறுவை விவசாயத் துறையின் விதைப் பண்ணையின் உத்தியோகபூர்வ இல்லத்தைச் சுற்றி பொருத்தப்பட்டிருந்த பாதுகாப்பற்ற மின்சார வேலியே யானையின் இறப்புக்குக் காரணம் என்று வனவிலங்கு துறை சந்தேகிக்கிறது.

இந்த விவகாரம் குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலன்னறுவை வனவிலங்கு அலுவலக அதிகாரிகள் இறந்த யானைக்கு சுமார் முப்பத்தைந்து வயது இருக்கும் என்று கூறுகின்றனர்.

பொலன்னறுவை வனவிலங்கு அதிகாரிகளும் காவல்துறையினரும் இணைந்து இந்த விவகாரம் குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# “ஆளும்தரப்பிடமே கேளுங்கள்”

## ரணில் அளித்த பதில்

ரணில் - ராஜபக்ச ஆட்சி என்று என்பிபியால் கடுமையாக விமர்சிக்கப்பட்ட ஆட்சிக் காலத்தில் ரணில்விக்கிரமசிங்கஅறிமுகப்படுத்திய பொருளாதார மறுசீரமைப்பு உள்ளிட்ட கொள்கைகளையே இன்றைய ஆளும்தரப்பும் பின்பற்றுகின்றதா என்பதை ‘ஆளும்தரப்பிடமே கேளுங்கள்’ என்று ரணில் தெரிவித்துள்ளார்.

தற்போதைய ஆளும்தரப்பு தனது ஆட்சிக்காலக்கொள்கைகளைபின்பற்றி வருகிறதா என்பது குறித்து முன்னாள் ஜனாதிபதிரணில்விக்ரமசிங்கநேற்றுக் கருத்து வெளியிட்டார்.

‘இந்தக் கேள்விக்கான பதிலை ஆளும்தரப்பிடமே கேட்க வேண்டும். பலரும் என்னிடம் இவ்வாறே கேட்கிறார்கள். ஆனால் அதற்கான சரியான பதில் ஆளும்தரப்பிடம்தான் உள்ளது,’ என விக்ரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற திறப்பு விழாவிற்கு வந்திருந்த அவரிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பியபோது இதனைத் தெரிவித்தார். நாட்டின் ☞2

## சிறைக்குள் ஹெரோயின் கடத்த முயன்றவர் கைது

யாழ் சிறைச்சாலைக்குள் உணவுப் பொதிக்குள் மறைத்து ஹெரோயினைக் கொண்டுசெல்ல முற்பட்டவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் யாழ். மாவட்டம், இளவாலைப் பகுதியைச் சேர்ந்த ஒருவரே 2 கிராம் 35 மில்லிகிராம் கெரோயினுடன் கைது செய்யப்பட்டள்ளார்

சம்பவம்தொடர்பானமேலதிகவிசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்

## காவடி ஆடிக்கொண்டிருந்த இளைஞன் மயங்கிச் சாவு

அம்பலாங்கொடையில் கோயில் ஏற்பாடு செய்த ஊர்வலத்தில் காவடி எடுத்த 20 வயது இளைஞர் ஒருவர் திடீரெனமயங்கிவிழுந்துஉயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

எட்கந்துர, தனபத்தேகம பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய மகிஷ பபாஷண என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

அம்பலாங்கொடை மாதம்பே நகர வீதிகளில் காவடி ஆடிச் சென்றுகொண்டிருந்தபோது அவர் மயங்கி விழுந்துள்ளார். பலபிட்டிய மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டபோதும் அவர் ☞2

## பொலிஸ் காவலில் சந்தேகநபர் இறப்பு

### மன்னார் பொலிஸ் நிலையத்தில் சம்பவம்

மன்னார் பேசாலை பொலிஸ் பிரிவில் போதைப்பொருள் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு, பேசாலை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்ட 34 வயது நபர், வெள்ளிக்கிழமை காலை தடுப்புக் காவலில் இறந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். ☞2

## உயரதிகாரிகளின் சொத்துக்கள் குறித்த விசாரணை தொடக்கம்

பல அரச உயரதிகாரிகளுக்குச் சொந்தமான சொகுசு விடுதிகள், விடுதிகள், வீடுகள் உள்ளிட்ட சொத்துக்கள் குறித்தவிசாரணைகள்தொடங்கப்பட்டுள்ளதாகஇலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர்ஜெனரல்ரங்கதிசநாயக்கதெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது குறைந்தபட்சம் நான்கு வழக்குகள் இந்தச் சட்டத்தின் கீழ் விசாரணையில் உள்ளன. இந்தச் சட்டம், சொத்து வைத்திருப்போர் அதன் மூலத்தை நியாயப்படுத்த முடியாத சூழலில், ஆளும்தரப்பு அந்தச் சொத்துக்களைப் பறிமுதல் செய்யும் அதிகாரத்தை வழங்குகிறது.

சாதாரண குற்றவியல் நீதிமன்ற விசாரணைகளில் போல் சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட ஆதாரங்கள் இதற்குத் தேவைப்படுவதில்லை. இச்சட்டத்தின் கீழ் சாத்தியக்கூறு சமநிலையின் அடிப்படையில் (balance of probabilities) சொத்துக்களைப் பறிமுதல் செய்ய முடியும். குற்றவாளிகளாக அறிவிக்கப்படாவிட்டாலும், சட்டபூர்வமான வருவாய் ஆதாரத்தை நிரூபிக்க முடியாவிட்டால் சொத்துகளை இழக்க நேரிடும்.

ஆணைக்குழுவின் பணிப்பாளர் ஜெனரலாக, மிகப்பெரும் பொறுப்பு என் மீது உள்ளது. ☞2

## ஏழாலையில் கத்திக் குத்தில் கடை உரிமையாளர் இறப்பு

யாழ். மாவட்டம் ஏழாலை என்ற இடத்தில் கத்திக்குத்துக்கு இலக்காகிய கடை உரிமையாளர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சுண்ணாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஏழாலை கிழக்கு பகுதியில்வர்த்தகநிலையத்தில்ஏற்பட்ட வாய்த்தர்க்கம் காரணமாக இந்தக் கத்திக்குத்துக்கு இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடைக்கு மது போதையில் வந்த இரண்டுஇளைஞர்கள்மிக்சர்தருமாறு கேட்டுள்ளார்கள். கடைக்காரர் பணம் தருமாறு கேட்டபோது, வாங்க வந்தவர்களுக்கும் கரைக்காரருக்கும் வாய் தர்க்கம் ஏற்பட்டுள்ளது. வாக்குவாதம் முற்றி, வந்தவர்கள் கடைக்காரரை கத்தியால் குத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

குத்தப்பட்ட கடைக்காரர் சம்ப இடத்திலேயே உயிரிழந்தார். ஏழாலை கிழக்கு பகுதியை சேர்ந்த தானவன் என்ற வயது ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தனவின் அழைப்பின்பேரில்கொழும்புவிடுதியொன்றில் இடம்பெற்ற கூட்டம் தொடர்பில் நேற்றுச் சில தகவல்களைப் பகிர்ந்துகொண்டிருந்தேன். இன்று அதனோடிணைந்த மேலும் சில தகவல்கள்.

இந்தக் கூட்டம் எதிர்க் கட்சிகளின் கூட்டுக்கு பெரும்பாலும் முற்றுப்புள்ளி வைத்துவிட்டது என்றே சொல்லலாம். அதற்குக் காரணம் இந்தக் கூட்டத்திற்கு ஐக்கிய மக்கள் சக்திக்கு அழைப்பு அனுப்பப்பட்டபோதும் அந்தக் கட்சியிலிருந்துயாரும்கலந்துகொள்ளவில்லை என்பதாகும்.

வியாழக்கிழமை இரவு கொழும்பு நீச்சல் கிளப் விடுதியில் நடந்த இந்த இரவு விருந்துடனான கூட்டத்தில் எதிர்க்கட்சிகளின் 18 பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். அவர்களில் ஜி.எல்.பீரிஸ், நாமல் ராஜபக்ச, அனுர பிரியதர்ஷன யாப்பா, பழனி திகம்பரம், காதர் மஸ்தான், உதய கம்மன்பில, தலதா அதுகோரலே, ரவி கருணாநாயக்க, ஹரின் பெர்னாண்டோ, டிரான் அலஸ், அசங்க நவரத்ன, மற்றும் வஜிர அபேவர்தன ஆகியோர் குறிப்பிடத்தகுந்தவர்கள்.

இந்த விருந்துக்கும் பேச்சுக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரஞ்சித் மத்தும பண்டார, கபீர் ஹாஷிம் மற்றும் திஸ்ஸ அத்தநாயக்க ஆகியோரும்அழைக்கப்பட்டிருந்தனர். ஆனால் அவர்கள் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை. மறுத்துவிட்டனர் என்று தெரிகிறது.

சிறந்த உணவுவகைகள் மற்றும் பிரீமியம் மதுபானங்களுடன் ஆடம்பரமாக பரவியிருந்த இந்த இரவு விருந்தில் ரணிலும் எதிர்க்கட்சி பிரதிநிதிகளும் பல முக்கிய முடிவுகளில் உடன்பட்டனர். அங்கு முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகள் அனைத்திற்கும் ரணில் இணங்கினார் என்று நேற்றே தெரிவித்திருந்தேன். அந்த முன்மொழிவுகளில் முதலாவது, எதிர்க்கட்சித் தலைவர்களின் கூட்டின் கீழ் நுகேகொடையில் ஒரு பெரிய பேரணியை ஏற்பாடு செய்வது. தொடக்கத்தில், நவம்பர் 21 இந்தப் பேரணிக்கான நாளாக முன்மொழியப்பட்டது. ஆனால் அந்த நேரத்தில் ஆளும்தரப்பு பதவியேற்று ஒரு வருடம் நிறைவடையும் என்று உதய கம்மன்பில நினைவூட்டியதைத் தொடர்ந்து, பேரணியை நவம்பர் 11 நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

மேலும், ரணிலின் தலைமையில், பேரணிக்கு இணையாக ஆயிரம் கிராம அளவிலான கூட்டங்களை நடத்தவும் முடிவு செய்யப்பட்டது.

இதற்கிடையே இந்தக் கூட்டத்திதை ஐக்கிய மக்கள் சக்தி புறக்கணித்தது மட்டுமல்ல, மோசடி, ஊழல் அல்லது இலஞ்சம் தொடர்பான குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகும் எவருக்கு ஆதரவாகவும் இனிமேல் குரல் கொடுப்பதில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தி முடிவும் செய்துள்ளது.

புதன்கிழமை நடைபெற்ற கட்சியின் மத்திய குழு கூட்டத்தின்போது இந்த முடிவு எடுக்கப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கைது செய்யப்பட்டபோது, அவர் தனது மனைவியுடன் பொது நிதியைப் பயன்படுத்தி பிரிட்டனுக்குப் பயணம் செய்து அரச பணத்தை வீணடித்தார் என்றே அவர் மீதான குற்றச்சாட்டு இருந்தது.

அந்தக் குறிப்பிட்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் கைது செய்யப்பட்டு அவர் காவலில் வைக்கப்பட்டார். இந்த நடவடிக்கை எதிர்க்கட்சிகளின் அரசியலை அடக்குவதற்கான ஒரு முயற்சியாகத் தோன்றியது என்று பலர் சுட்டிக்காட்டினர். இதனாலேயே ஐக்கிய மக்கள் சக்தி ரணில் விக்கிரமசிங்கவின் கைதுக்கு எதிராகக் குரல் கொடுத்தது. ஆனால், அதன் பின்னர் ரணில் நடந்துகொண்ட விதம், மீண்டும் ஐக்கிய மக்கள் சக்தியையும் சஜித்தையும் வீழ்த்தும் வகையில் இருந்ததால் இனிமேல் இத்தகைய எந்தவொரு அரசியல்வாதி மீதும் ஊழல், மோசடி, இலஞ்சக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டாலும் அவர்களுக்கு ஆதரவாகச் செயற்படுவதில்லை என்ற முடிவை ஐக்கிய மக்கள் சக்தி எடுத்துள்ளது.

ஆக மொத்தத்தில் எதிர்க் கட்சிகளின் கூட்டு இனிமேல் சாத்தியப்படுவதற்கான வாய்ப்புக்கள் மிகக் குறைவே..

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com

## அஸ்வெசும ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வறுமைக்கோட்டிற்குஉட்பட்டகுடும்பங்களுக்கு அவற்றின் வருமானத்திற்கு ஏற்ப உதவித் தொகை வைப்பிலிடப்படுகின்றது.

'ஒரு சமூகப் பாதுகாப்புத் திட்டம் வறுமை ஒழிப்பு, முதலீடு, சேமிப்பு, உற்பத்தி மற்றும் ஏற்றுமதியை உறுதி செய்ய வேண்டும். இருப்பினும், அஸ்வெசும இந்த நோக்கங்களை நிறைவேற்றத் தவறிவிட்டது. தற்போதைய ஆளும்தரப்பு அந்தத் திட்டத்தையும் நிறுத்திவிடுவதற்குத் திட்டமிடுகின்றது' என்று சஜித் பிரேமதாச மேலும் தெரிவித்தார்.

## ஏழாலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

35 கடை உரிமையாளரே உயிரிழந்துள்ளார்

உயிரிழந்தவரின் சடலம் தொல்லிப்பழை ஆதாரவைத்தியசாலையில்சேர்க்கப்பட்டுளளது

சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு சந்தேகநபர்களையும் சுன்னாகம் பொலிசார் கைதுசெய்துள்ளனர்

## உயரதிகாரிகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சொத்துக்களை மையப்படுத்தி விசாரணைகளைச் செய்யும் வசதியை இச்சட்டம் வழங்குகிறது. ஏற்கனவே பல விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேலும், குற்றவியல் தீர்ப்பின்றியும் சொத்துகளை பறிமுதல் செய்யும் அதிகாரம் இச்சட்டத்தின் மூலம் கிடைத்திருக்கின்றது. பொதுமக்கள் சந்தேகத்துக்குரிய தகவல்களை பொலிஸில் இதற்குரிய தனி விசாரணைப் பிரிவிற்கு (ஊணைளீணுாம்) அறிவிக்கவேண்டும். சட்டவிரோத சொத்துகளைப் பற்றிய தகவலை அறிந்தும்பொலிஸில்தெரிவிக்காதது குற்றமாக கருதப்படும்.

குற்றவாளிகளை தண்டிப்பதைவிட, திருடப்பட்ட சொத்துகளை மீட்டெடுத்து மக்களிடம் கொண்டு சேர்ப்பதே இச்சட்டத்தின் நோக்கம். அதேவேளை, பொலிஸாரின் சிறப்பு நடவடிக்கைகளின் மூலம் சுமார் ரூ. 4.5 பில்லியன் பெறுமதியான, குற்றவாளிகளுடன் தொடர்புடைய சொத்துகள் ஏற்கனவே பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. பறிமுதல் செய்யப்பட்ட சொத்துக்களில் கட்டடங்கள், வீடுகள், வாகனங்கள், நிலங்கள், தங்க ஆபரணங்கள், படகுகள் மற்றும் மொத்தம் ரூ. 57 மில்லியன் பணமும் அடங்குகின்றன என்றார்.

2025 ஏப்ரல் 8 நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட இந்தச் சட்டம், ஊழலை எதிர்த்து சொத்து மீட்பு நடவடிக்கைகளை வலுப்படுத்தும் முக்கிய முன்னேற்றமாகக் கருதப்படுகிறது. இச்சட்டம் சட்டவிரோதமாகச் சம்பாதிக்கப்பட்ட சொத்துக்களை அடையாளம் காண, முடக்க, பறிமுதல் செய்யும் அமைப்புகளை அறிமுகப்படுத்துகிறது. குற்றவாளியைத் தண்டிப்பதைவிட, சொத்துக்களை மீட்பதில் முக்கிய கவனம் செலுத்துகிறது. இந்தச் சட்டம் 2025 ஜூன் 1 முதல் அமலுக்கு வந்தது.

## ஆளும்தரப்பிடமே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போதைய அரசியல் நிலைமை குறித்த கேள்விக்கு, 'இன்றைய அரசியல் சூழ்நிலை நல்லதா கெட்டதா என்பதை ஆளும்தரப்பிடமே கேட்கவேண்டும். அந்தக் கேள்விக்கான சரியான பதிலை அவர்களே தரமுடியும்,' என விக்ரமசிங்க சுட்டிக்காட்டினார்.

அவரது இந்தக் கருத்துகள், நாட்டின் புதிய அரசியல் சூழல் மற்றும் கொள்கை திசைமாற்றங்களை முன்னிட்டு ஆளும்தரப்பின் நிலைப்பாட்டை மீண்டும் கேள்விக்குள்ளாக்குவதாக அரசியல் வட்டாரங்களில் மதிப்பிடப்படுகின்றன.

## பொலிஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்தவர், வவுனியா கூமாங்குளத்தைச் சேர்ந்த கபிலன் (34) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

பேசாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கட்டாஸ்பத்திரி பகுதியில் வியாழக்கிழமை மாலை, போதைப்பொருள் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கபிலன் என்ற நபர் கைது செய்யப்பட்டார்.

பொலிஸார் அவரைத் துரத்திப் பிடித்த நிலையில், அவருடன் இருந்த மற்றொரு நபர் தப்பி ஓடியுள்ளார்.

கைது செய்யப்பட்ட கபிலனை பொலிஸார் பேசாலை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச்சென்று, தடுப்புக்காவலில் வைத்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

பொலிஸ்நிலையத்தின்கைதிகள்கூண்டில் அவர் தடுத்து வைக்கப்பட்ட நிலையில், நேற்று காலை அவர் உயிரிழந்திருந்தார் என்று பொலிஸார் கூறுகின்றனர்.

# 'வேர்முகங்கள்' நூல் அறிமுக விழா

கலை, இலக்கியப் பேராளுமைகளுடன் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவரும் வடக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சருமான ஐங்கரநேசன் மேற்கொண்ட நேர்காணல்களின் தொகுப்பான 'வேர்முகங்கள்' என்ற நூலின் அறிமுக நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்குத்தண்ணீரூற்று முள்ளியவளையில் அமைந்துள்ள பரி-மத்தியா ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முல்லை மாவட்ட மேலதிகச் செயலாளர் குணபாலன் தலைமையில் நடைபெற உள்ள இவ்வறிமுக விழாவில் கருத்துரைகளை ஊடகவியலாளர் திவாகர் மற்றும் சமூக ஆய்வாளர் மதுசூதனன் ஆகியோர் நிகழ்த்த உள்ளனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையின் முதுநிலை விரிவுரையாளர் அருந்தாகரன் அறிமுக உரையை நிகழ்த்த, நூலின் சிறப்புப் பிரதிகளை மூத்த பாடலாசிரியர் செல்லக்குட்டி வழங்கி வைப்பார்.




# பன்னாட்டு சிறுவர், முதியோர் தினம் நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில்

2025 ஆண்டிற்கான பன்னாட்டு சிறுவர், முதியோர் தினமானது 'உலகை வழிநடத்த அன்பால் போஷியுங்கள்' என்னும் தொனிப்பொருளில் நேற்றுப் பகல் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் வரவேற்பு நடனம், பாட்டு (தெல்லிப்பழை முதியோர் சங்கம்) மொழிப்புலமை திறனை வெளிப்படுத்தல், நடனம், ஒயிலாட்டம் (உதயதாரகை சிறுவர் இல்லம்), நாடகம் போன்ற நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன.

முதியோர்சுயதொழில்பயனாளிகள்மற்றும் வெற்றி பெற்ற முதியோர் சங்கங்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டதுடன் சிறுவர்கள், முதியோகளுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாண மாவட்ட மேலதிகச் செயலர் சிவகரன் தலைமையில் நடந்த இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும், வாழ்நாள் பேராசிரியருமான பாலசுந்தரம்பிள்ளை, சிறப்பு விருந்தினர்களாக யாழ். போதனா வைத்தியசாலை குழந்தை நல வைத்திய வல்லுனர் ஸ்ரீசரவணபவானந்தன், யாழ். மாவட்டச் செயலர் பிரதீபன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.





காலைக்கதிர் ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

## காவடி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்துவிட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவருக்கு வேறு எந்த நோயும் இல்லை என்றும் அவரது இறப்பு பெரும் அதிர்ச்சியளிப்பதாகவும் குடும்பத்தினர் தெரிவித்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir

### குப்பை மேடு எமது ஊரில் வேண்டாம்

# நல்லூர் பிரதேச சபையை எதிர்த்து ஒக்.8 அரியாலை மக்கள் போராட்டம்

அரியாலையில் குப்பை மேடு அமைக்கும் நல்லூர் பிரதேச சபையின் திட்டத்துக்கு அந்த ஊர் மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். தமது எதிர்ப்பைப் பதிவு செய்யும் விதமாக ஒக்டோபர் 8 ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவும் அவர்கள் முடிவு செய்துள்ளனர்.

இது தொடர்பில், அந்த ஊர் மக்களும் அந்த ஊரைச்சேர்ந்த புலம்பெயர் மக்களும் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

உலகமெங்கும் சுற்றுச் சூழல் பாதுகாப்புக்காக மக்கள் போராடி வருகின்றனர். அரியாலையூர் மக்களாகிய நாமும் நமது ஊரைப் பாதுகாப்பதற்காக நமது அழகிய ஊரின் நிலம், கடல், நீர்வளம், தூயகாற்று போன்ற இயற்கையின் கொடைகளை காப்பாற்றுவதற்காகப் போராட வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

நல்லூர் பிரதேச சபை, எமது ஊர்மக்களுடன் எந்த வகையிலும் கலந்துபேசாது சூழலை மாசுபடுத்தக்கூடிய குப்பைகளை எமது ஊரில் வீசும் திட்டத்தைத் தொடங்கியிருப்பது எமது ஊர் மக்களால் மட்டுமல்ல இயற்கையையும் மனிதத்தையும் நேசிக்கும் எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாத அநீதியாகும்.

இயற்கைப் பசளை உற்பத்தி என்ற பெயரில் ஏமாற்றுத்தளமாக எந்த வகையிலும் வகைப்படுத்தப்படாத - மக்காத குப்பைகளை எமது ஊரில் கொட்டி எமது ஊரை குப்பைமேடாக மாற்றும் முயற்சியை நல்லூர் பிரதேச சபை உடனடியாகக் கைவிட வேண்டும்.

எமது இயற்கை வளங்கள் இன்றைய தலைமுறையானஎமக்குமட்டுமானதல்ல, எதிர்கால தலைமறைக்கும் சொந்தமானவையாகும். எமது ஊரின் இயற்கை வளங்களைப் பாதுகாத்து எதிர்கால சந்ததியிடம் ஒப்படைக்க வேண்டிய பொறுப்பு எமது தலைமுறைக்கு உண்டு. இதனால் மக்களுக்கும் இயற்கைக்கும் விரோதமான குப்பை மேட்டுத் திட்டத்தைக் கண்டித்தும் அதனைக் கைவிடக் கோரியும் ஒக்டோபர் 8 மக்கள் அணிதிரள வேண்டும் எனக் கோருகிறோம். - என்றுள்ளது.

## பண்டாரிக்குளம் பொலிஸ் நிலையத்தில் புதிய கட்டடம் திறப்பு

வவுனியா, பண்டாரிக்குளம் பொலிஸ் நிலையத்தில் புதிதாக அமைக்கப்பட்ட பொலிஸ் நிலைய கட்டடத்தினை வவுனியா மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் சாமந்த விஜயசேகர நேற்று (04) திறந்து வைத்தார்.



இந்நிகழ்வில் மதத் தலைவர்கள், சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் சோமரத்ன விஜயமுனி, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, பண்டாரிக்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, சமுதாய பொலிஸ் குழு உறுப்பினர்கள், கிராம அலுவலர்கள், பொலிசார், கிராம மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## சட்டவிரோத பீடி இலைகள் ஆத்தாளை பகுதியில் கண்டுபிடிப்பு.

(சியாஜ்)

இந்தியாவிலிருந்து கடல் வழியாக நாட்டிற்குள் கடத்தப்பட்ட 408 கிலோ பீடி இலைகளையும், கடத்தலுக்கு பயன்படுத்திய பொலோரோ ரக ஜீப் வண்டியையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டார் என்று நுரைச்சோலை பொலிஸார் தெரிவித்தனர்.

கற்பிட்டி ஏத்தாளை பகுதியில் வியாழக்கிழமை இரவு நடந்த சுற்றிவளைப்பில் பீடி இலைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. பொலிஸ் சிறப்பு பணியகத்தின் கற்பிட்டி பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்தச் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

பீடி இலைகளுடன் கைது செய்யப்பட்டவர் புத்தளத்தைச் சேர்ந்த 34 வயதுடைய நபர். பறிமுதல் செய்யப்பட்ட பீடி இலைகள் மற்றும் ஜீப் வண்டி என்பவற்றுடன் சந்தேகநபரும் புத்தளம் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார்.






காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## குழந்தைகள் பாதுகாப்பு: நாட்டின் உடனடி கடமை

இலங்கையில் ஆண்டுதோறும் குழந்தைகளோடு தொடர்புபட்ட குற்றங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றன. தேசியச் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை (NCPA) தெரிவித்துள்ளதன்படி, நாடு முழுவதும் இருந்து 8,000க்கும் மேற்பட்டய முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. இது குழந்தைகளின் உரிமைகள், பாதுகாப்பு, நலன் ஆகியவற்றுக்கு எதிரான மீறல்களின் தீவிர நிலையை வெளிப்படுத்துகிறது.

### நடவடிக்கைகள் இல்லை

இலங்கையின் தேசியக் குழந்தைகள் பாதுகாப்புக் கொள்கை, ஒவ்வொரு குழந்தையும் பாதுகாப்பான சூழலில் வாழவேண்டும் என்ற அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது. சட்டரீதியாகவும், சமூக ரீதியாகவும், நிறுவன ரீதியாகவும் தேவையான சீர்திருத்தங்களை மேற்கொள்ளும் அடித்தளமாக இக்கொள்கை உள்ளது. ஆனால் துரதிருஷ்டவசமாக, நடைமுறையில் அதற்கான ஒத்துழைப்பு, ஒருங்கிணைப்பு, செயலாக்கம் ஆகியவை மிகவும் பின்தங்கியுள்ளன.

அரச மற்றும் அரசு சாரா அமைப்புகள் குழந்தைகளின் உரிமைகளைக் காக்கின்றன. இருப்பினும், அவற்றின் இடையே ஒருங்கிணைப்பு இல்லாமை, நடவடிக்கைகள் சீராகச் செல்லாதிருப்பது போன்ற காரணங்களால் குழந்தைகள் இன்னும் ஆபத்துக்குள்ளாகி வருகின்றனர்.

### புதிய சவால்கள்

இன்றைய டிஜிட்டல் காலத்தில் குழந்தைகளுக்கான அச்சுறுத்தல்கள் பாரம்பரிய எல்லைகளைத் தாண்டி வருகின்றன. பல்வேறு நாடுகளின் டார்க் வெப் மற்றும் டீப் வெப் வழியாக சுமார் 100,000 குழந்தைகளின் நிர்வாணப் ஒளிப்படங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இது உலக அளவில் குழந்தைகள் சுரண்டலின் பரவலான பரிமாணத்தைக் காட்டுகிறது. இலங்கையிலுள்ள குழந்தைகளும் இந்த வலைப்பின்னல்களில் சிக்கிக் கொண்டிருக்கக்கூடும் என்பதால், நாட்டின் பொறுப்பு மேலும் அதிகரிக்கிறது.

சர்வதேச குடிமக்கள் மற்றும் அரசியல் உரிமைகள் ஒப்பந்தம் (ICCPR) குழந்தைகளின் உரிமைகள் பாதுகாப்பிற்கான உலகளாவிய அடித்தளமாக விளங்குகிறது. இலங்கையும் அந்த ஒப்பந்தத்தில் பங்கெடுத்திருப்பதால், நாட்டின் குழந்தைகளைப் பாதுகாப்பது ஒரு சட்டப்பூர்வ மற்றும் ஒழுக்கப்பூர்வக் கடமையாகும். ஆனால் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டிருப்பது போதாது; அதற்கான செயல்திறனும் சட்ட அமலாக்கமும் வெளிப்படையாக இருக்க வேண்டும்.

### விழிப்புணர்வு தேவை

குழந்தைகள் மீது வன்முறை, பாவனை, சுரண்டல், புறக்கணிப்பு போன்றவை சமூகத்தில் பெருகிவருகின்றன. மதுபானம், போதைப்பொருள், குடும்ப சீர்கேடு, வறுமை போன்றவை இதற்கு காரணிகள். பள்ளி ஆசிரியர்கள், மத தலைவர்கள், பெற்றோர், சமூக அமைப்புகள் என அனைவரும் இணைந்து குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் பணியில் ஈடுபட வேண்டும். இது ஒரு அமைப்பின் பொறுப்பு மட்டுமல்ல; முழு சமூகத்தின் கடமை.

ஆளும் தரப்பும் சட்ட அமலாக்க அமைப்புகளும் இந்தப் பிரச்சினையை மிகுந்த தீவிரத்துடன் அணுக வேண்டும். முறைப்பாடுகள் கிடைக்கும் தருணத்தில் உடனடி விசாரணை, நீதிமன்ற நடவடிக்கைகள், குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனைகள் வழங்கப்படவேண்டும். அதேசமயம், குழந்தைகளுக்கான பாதுகாப்பான இடங்களை உருவாக்கவும், ஆலோசனைச் சேவைகள், உளவியல் ஆதரவு ஆகியவற்றை விரிவுபடுத்தவும் ஆளும்தரப்பு முன்வரவேண்டும்.

ஒரு நாட்டின் எதிர்காலம் அதன் குழந்தைகளின் பாதுகாப்பிலும் நலத்திலும் அடங்கியுள்ளது. குழந்தைகள் பாதுகாப்பற்ற சூழலில் வாழும் நாடு முன்னேற முடியாது. எனவே, முறைப்பாடுகளைப் பதிவு செய்வதோடு மட்டும் நின்றுவிடாமல், அதற்கான பயனுள்ள நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

குழந்தைகள் பாதுகாப்பு என்பது ஒரு கொள்கை ஆவணம் அல்லது அலுவலக அறிக்கை மட்டுமல்ல; அது ஒவ்வொரு குடிமகனின் பொறுப்பு. ஆளும் தரப்பு, சட்ட அமலாக்க அமைப்புகள், சமூக அமைப்புகள், பெற்றோர் என அனைவரும் ஒன்றிணைந்தால் மட்டுமே நாட்டின் ஒவ்வொரு குழந்தையும் உண்மையான பாதுகாப்பைப் பெற முடியும்.

### திருமலை மாவட்டத்தில் போரால் இடம்பெயர்ந்த பின்னர்

## மீளக்குடியேறியோரின் வீட்டு சான்றிதழ்கள் வழங்கி வைப்பு

(ஹஸ்பர்)

போரினால் இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்த வீடற்ற நபர்களுக்கு வீடு வழங்கப்பட்டதற்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு உலக குடியிருப்பு தினத்தை முன்னிட்டு வெள்ளிக்கிழமை நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு பிரதி அமைச்சர் சரத் தலைமையில் திருகோணமலை மாவட்ட செயலக பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.





'சொந்தமாக இருக்க இடம் - ஒரு அழகான வாழ்க்கை' எனும் தொனிப்பொருளின் கீழ் இவ்வீடமைப்பு திட்டங்கள் மாவட்ட மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. 335 வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. ரூ. 9 லட்சம் மதிப்பில் 130 வீடுகளும், ரூ. 15 லட்சம் மதிப்பில் 205 வீடுகளும் கட்டப்பட்டுள்ளன.

மூதூர், கிண்ணியா, வெருகல், பட்டினமும் சூழலும், மொறவெவ, தம்பலகாமம், கோமரன்கடவல, குச்சவெளி ஆகிய பிரதேச செயலகங்களை உள்ளடக்கி போரினால் இடம்பெயர்ந்த மக்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட 335 பயனாளிகளுக்கு இந்த வீடுகள் அமைக்கப்படுகின்றன. அவர்களில் 100 பேருக்கு அடையாளமாகவும் சட்டப்பூர்வமாகவும் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த தேர்வு செய்யப்பட்ட வீடுகளுக்கு பிரதி அமைச்சர் சரத் நேரில் சென்று பயனாளிகளின் குறை நிறைகளை கேட்டறிந்துகொண்டார். பயனாளிகளின் வீட்டு வளாகத்தில் பயன் தரும் மரக்கன்றுகளும் பிரதி அமைச்சரால் நடப்பட்டன.

ஆளும்தரப்பின் கொள்கையின்படி, சம்பந்தப்பட்ட பகுதியின் பிரதேச செயலாளரின் பரிந்துரையின் பேரில், தகுதிவாய்ந்த மக்களுக்கு வீடுகளை வழங்குவதே முக்கிய நோக்கம் என்று மாவட்டச் செயலர் ஹேமந்த குமார தெரிவித்தார்.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரொஷான் அக்மீமன,

மாவட்ட மேலதிகச் செயலர் சுதாகரன், தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர்களின் இணைப்புச் செயலாளர்கள், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள், துறைசார்ந்த அதிகாரிகள் மற்றும் பயனாளிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## உள நல நாளினை முன்னிட்டு வவுனியாவில் குடும்ப உறவுகளிற்கான விளையாட்டு நிகழ்வு

உள நல நாளினை முன்னிட்டு குடும்ப உறவுகளிற்கான விளையாட்டு நிகழ்வு நேற்று வவுனியா, சமளங்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் இடம்பெற்றிருந்தது.

இதன்போது அம்மாக்கள் அணி மற்றும் மகள்கள் அணிகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்டப் போட்டியும், அப்பாக்கள் அணி மற்றும் மகன்கள் அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டியும் இடம்பெற்றிருந்தது.

சமளங்குளம் பாடசாலை அதிபர் கணேஷ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்விலே பிரதம விருந்தினராக தெற்கு வலயக் கல்விபணிப்பாளர் முகுந்தன் மற்றும் கல்வித் திணைக்கள உயர்அதிகாரிகள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள்எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.





காலைக்கதிர் Kalaikkathir

# கொட்டும் மழைக்கு மத்தியிலும் விவசாயிகள் தொடர் போராட்டம்

(ஹஸ்பர்)

திருகோணமலை முத்துநகர் விவசாயிகள் திருகோணமலை மாவட்ட செயலகம் முன்பாக கொட்டும் மழையிலும் நேற்று 18ஆவது நாளாகவும் தொடர் சத்யாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தாங்கள் 53 வருடங்களாக விவசாயம் செய்து வந்த விவசாய நிலத்தை தனியார் நிறுவனகளுக்கு சூரிய மின் சக்தி உற்பத்திக்காக இலங்கை துறைமுக அதிகார சபையின் காணி என அப்பட்டமாகப் பொய்கூறி வழங்கி வைக்கப்பட்டதை எதிர்த்தே அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். தமது காணிகளை மீளப் பெற்றுத் தருமாறு ஆளும்தரப்பிடம் ஆவர்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

முத்து நகர் விவசாய காணியில் சுமார் 800 ஏக்கர் அளவில் நில அபகரிப்பு செய்யப்பட்டு இருநூறு ஏக்கருக்கும் மேல் தற்போது சுத்தமாக்கப்பட்டு விவசாய குளங்களை மூடிய நிலையில் சூரிய மின் சக்திக்காக கையகப்படுத்தியுள்ளனர்.

இதனால் விவசாயத்தை நம்பிய நிலையில் தாங்கள் மேற்கொண்ட வாழ்வாதாரமா விவசாயச் செய்கை முழுதும் பாதிக்கப்பட்டதாக தெரிவிக்கின்றனர்.

சுதந்திரத்திற்கான பெண்கள் இயக்கமும் இந்தச் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் இணைந்து 'முத்து நகர் விவசாயிகளின் போராட்டத்திற்கு நாமும் ஒன்றிணைவோம்' போன்ற பதாகையினையும் காட்சிப்படுத்தியுள்ளனர்.

முத்து நகர் மக்கள் தமது காணிகளை மீட்பதற்காக அரசுத்தலைவர் செயலகம் தொடக்கம் பிரதமர் அலுவலகம் வரை பல இடங்களுக்கும் சென்று போராடிய போதும் இன்று வரைக்கும் தீர்வு கிட்டவில்லை எனத் தெரிவிக்கின்றனர்.

அகில இலங்கை விவசாய சம்மேளனம், மக்கள் போராட்ட முண்ணனியினர் இந்த மக்கள் போராட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர்.




## கிண்ணியா உலமா சபையினருக்கும் பிரதி அமைச்சருக்குமிடையில் சந்திப்பு

(றிஸ்னாத்)

வெளிவிவகாரம் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திராவுக்கும் கிண்ணியா ஜம்மியத்தில் உலமா சபையினருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று கிண்ணியா ஜம்மியத்துல் உலமா சபை அலுவலகத்தில் இடம்பெற்றது.

கிண்ணியா ஜம்மியத்தில் உலமா சபையின் தலைவரும், இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக மூத்த விரிவுரையாளருமான கலாநிதி நசார் தலைமையில் இடம்பெற்ற இச் சந்திப்பில் இளைஞர்களுக்கான வேலை வாய்ப் புக்கள், கிண்ணியா கால்நடை வளர்ப்பாளர்கள் எதிர் கொள்ளும் பிரச்சனைகள், கிண்ணியா பொலிஸ் நிலையத்தில் நிலவும் வெற்றிடங்கள், விவசாய நிலங்களுக்கான போக்குவரத்து பிரச்சினைகள், விளையாட்டு மைதான குறைபாடு, ஆசிரியர் வாண்மை விருத்தி நிலையம் தொடர்பான பிரச்சினைகள், பொதுபோக்குவரத்து பிரச்சினைகள் உள்ளிட்ட பல்வேறுபட்ட விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இந்தச் சந்திப்பில், கிண்ணியா உலமா சபை உறுப்பினர்கள் மற்றும் தேசிய மக்கள் சக்திக் கட்சியின் நகர சபை, பிரதேச சபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.




## தேசிய மக்கள் சக்தி அலுவலகம் பருத்தித்துறையில் நேற்று திறப்பு

தேசிய மக்கள் சக்தியின் வடமராட்சி அலுவலகம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. பருத்தித்துறை முதலாம் கட்டை சந்திக்கு அருகாமையில் அமைந்துள்ள கட்டடத்தில் இந்த அலுவலகம் அமைந்துள்ளது.

போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் விமல் ரட்ணாயக்கா முதன்மை விருந்தினராக் கலந்துகொண்டு அலுவலகத்தைத் திறந்து வைத்தார். கடற்றொழில் நீரியல் வள அமைச்சர் சந்திரசேகரன் சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டார்.

இருப்பினும் கரவெட்டி பிரதேச சபை உறுப்பினர்களான கருணரூபன் மற்றும் கவியரசி ஆகியோரை நாடாவைவெட்டி அலுவலகத்தைத் திறக்கும்படி அமைச்சர்கள் நெறிப்படுத்தினர்.

தொடர்ந்து அமைச்சர் பிமல் ரட்ணாயக்கா அலுவலக புத்தகத்தில் கையொப்பம் இட்டதைத் தொடர்ந்து மங்கள விளக்கு ஏற்றப்பட்டது. அமைச்சர் பிமல் ரட்ணாயக்கா அங்கு உரையாற்றினர்.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ரஜீவன், பவானந்தராஜா இளங்குமரன் ஆகியோரும் நிகழ்வுக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.



38 வது ஆண்டு நினைவு நாள் அஞ்சலி-05.10.2025

தமிழ்ஈழ சுதந்திரத்திற்காகப் போராடித்
தமது இன்னுயிர்களைத் தியாகம் செய்த தளபதிகள்
குமரப்பா, புலேந்திரன் மற்றும்
முன்னணிப் போராளிகளான
கரன், பழனி, நளன், ரகு, அப்துல்லா,
நரேஸ், தவக்குமார்,அன்பழகன், றெஜினோல்ட்,
ஆனந்தகுமார் ஆகியோரின் உயிர்களைக் காப்பாற்ற
இந்திய அமைதிப்படை தவறியதன் விளைவாக
சயனட் உட்கொண்டு சாவைத் தழுவிக் கொண்ட
12 மாவீரர்களுக்கும் எமது வீர அஞ்சலி!

தமிழீழ சுதந்திர போராட்டத்தில் ஐம்பது ஆயிரத்துக்கு
தம் உயிர்களைத் தியாகம் செய்த மாவீரர்களுக்கும்
எமது வீர அஞ்சலி!

தமிழினப் படுகொலை ( Tamil Genocide) செய்யப்பட்ட
ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட அப்பாவி தமிழ் மக்களுக்கும்
எமது இதய அஞ்சலி !



தமிழ் இனப் படுகொலைக்காக சர்வதேச நீதி வேண்டி
சர்வதேச நீதிக்காக நீதிமன்றத்தில்
(International Court of Justice -ICJ)
இலங்கை அரசை நிறுத்தி நீதி கிடைக்கச் செய்வோம்.

கட்டாயமாக காணாமல் போகச் செய்யப்பட்டவர்களின்
பிரச்சனையில் சர்வதேச நீதி கிடைக்கச் செய்வோம்.

ஈழத்தமிழ் தேசிய இனத்தின் இறைமையின் அடிப்படையில்
சுயநிர்ணய உரிமைக்கான ஒரு பொதுமக்கள் வாக்கெடுப்பை
(Referendum) இலங்கையின் வடக்கு, கிழக்கு,
மாகாணங்களிலும் புலம்பெயர் தேசங்களிலும் சர்வதேச சமூகம்
நடத்த வேண்டும் என்றும் புலம்பெயர் தமிழர்களும்
தங்கள் தங்கள் நாடுகளில் இருந்தபடியே
வாக்களிக்கக் கூடியவாறு சுதந்திரமா?
இலங்கை அரசின் தீர்வு யோசனையா ?
என்ற கேள்விக்கு விடையளிக்கக் கூடியவாறு
வாக்கெடுப்பு அமைய வேண்டும்.

தமிழ் இனப்படுகொலையில் சம்பந்தப்பட்ட இலங்கையின் படை வீரர்களை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில்
அல்லது சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயத்திலோ நிறுத்தி நீதி கிடைக்கச் செய்வோம்.
இலங்கைத்தீவுக்கு காலனித்துவ ஆதிக்கம் ஏற்படும் முன்னர் இருந்து யாழ்ப்பாண இராச்சியத்துக்கு சுதந்திரம்
வழங்கப்படவில்லை. இது ஒரு பூர்த்தி செய்யப்படாத குடியேற்ற பிரச்சனை (Unfinished Decolonization)
இடைக்கால தீர்வாக (Non self Governing Territory ) என வடக்கு கிழக்கு மாகாணங்களை
பிரகடனப்படுத்துமாறு சர்வதேச சமூகத்தைக் கோருவோம் !

தமிழர்களின் தாகம்! தமிழீழத் தாயகம் !!

காலைக்கதிர் Kalaikkathir

# குறிகாட்டுவான் இறங்குதுறையின் மறுசீரமைப்பு நேற்றுத் தொடக்கம்



யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கும் நயினா தீவு, நெடுந்தீவு உள்ளிட்ட தீவுகளுக்கும் இடைப்பட்ட போக்குவரத்து மையமாக உள்ள குறிகாட்டுவான் இறங்குதுறையை மறுசீரமைக்கும் பணிகள் நேற்று வைபவ ரீதியாகத் தொடக்கி வைக்கப்பட்டன.

போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள் சிவில் விமான சேவைகள் அமைச்சின் 299 மில்லியன் மக்களின் வரிப் பணத்தில் இத்திட்டம் நிறைவேற்றப்பட உள்ளது

தீவகளுக்கு இடையிலான போக்குவரத்தில் மிக முக்கிய இடத்தை வகிக்கும் இந்த துறை மிக நீண்ட காலமாகச் சரிவர சீரமைக்கப்படாமல் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர். நெடுந்தீவு நைனாதீவு அனலைதீவு எழுவைதீவு போன்ற தீவகப் பகுதிகளுக்கு செல்வதற்கு இந்தத் துறையே முக்கிய மையமாகத் திகழ்கிறது.

நேற்றைய நிகழ்வில் நெடுந்தீவில் நீண்ட காலப் பிரச்சினையாக இருந்த எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கான ஒப்பந்தமும் நெடுந்தீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்துடன் பொற்றொலிய கூட்டத்தாபனத்தால் அமைச்சர்கள் முன்னிலையில் கையெழுத்திடப்பட்டது.

நேற்றைய நிகழ்வில் கலந்துகொண்ட மீனவர்கள், தங்கள் படகுகளைக் கரைக்குக் கொண்டு வந்து அணைப்பதில் காணப்படும் சிரமங்களை அமைச்சர்களுக்கு எடுத்து விளக்கினர். இந்தப் பிரச்சினையைத் தீர்க்க தமக்கான மீன்பிடித் துறை ஒன்றை அமைப்பதற்கான கோரிக்கையையும் முன்வைத்தனர். அவர்களின் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கான சாத்தியப்பாடுகள் குறித்து ஆராய்வதாகத் தெரிவித்த மீன்பிடித்துறை அமைச்சர் சந்திரசேகரன், மீன்பிடித்துறை அமைவதற்குச் சாதகமான இடங்கள் குறித்தும் ஆய்வு செய்தார்.

இந்நிகழ்வில் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க கடற்றொழில் நீரியல் வளங்கள் அமைச்சர் சந்திரசேகரன், யாழ். மாவட்ட ஆளும்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான இளங்குமரன், ஸ்ரீபவானந்தராஜா, றஜீவன், யாழ். மாவட்டச் செயலர் பிரதீபன், வேலணை மற்றும் நெடுந்தீவு பிரதேச செயலர்கள், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர், வடக்கு மாகாணப் வீதி அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர், மாவட்ட பொறியியலாளர்கள், வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர், வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர், நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் எனப் பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்

## சிறுவர் தின நிகழ்வு

(ஸாகிர்)




'உலகை வழிநடாத்த அன்பால் போஷியுங்கள்' எனும் தொனிப்பொருளில் இவ்வருடம் கொண்டாடப் படும் சிறுவர் தின நிகழ்வுகள் சாய்ந்தமருது லீட்தவே முன்பள்ளியிலும் கொண்டாடப்பட்டது.

சிறுவர்களுக்காக நடத்தப்பட்ட போட்டி நிகழ்ச்சிகள், கலை நிகழ்ச்சிகளில் சிறுவர்கள் தங்கள் திறமைகளை சிறந்த முறையில் வெளிக்காட்டி இருந்தனர்.

சிறுவர்களுக்கு அதிதிகளால் பரிசில்களும் வழங்கப்பட்டன. நிகழ்வுகள் அனைத்தும் நிறுவனத்தின் பணிப்பாளர் உவைஸ் தலைமையிலும் நிறுவனத்தின் அதிபர் பர்ஸானாவின் வழிகாட்டல் மற்றும் நெறிப்படுத்தலிலும் இடம்பெற்றன.

கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை வைத்தியர் நபிலா, சாய்ந்தமருது ரியாலுல் ஜன்னா பாடசாலை அதிபர் அஸ்தர், கிராம அலுவலர் நாஸர், திடீர் இறப்பு வைத்திய அதிகாரி ஜவாஹிர், நீர்வழுங்கல் சபை உத்தியோகத்தர் ரிம்ஷான், சாய்ந்தமருது ஜனாஸா நலன்புரி அமைப்பின் தலைவர் அஸ்வர் உட்பட பலர் கலந்து கொண்டு சிறுவர்களுக்கு பரிசில்களை வழங்கி வைத்தனர்.

## சுகாதார விதிகளைப் பேணத் தவறிய கடைகளுக்கு ரூ. 1.6 லட்சம் தண்டம்

யாழ்ப்பாணத்தில் சுகாதார விதிமுறைகளை பேணாத உணவகம் மற்றும் பல்பொருள் அங்காடிகள் ஆகியவற்றுக்கு ஒரு இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை நகர சபையின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதியில் உள்ள உணவகங்கள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் என்பவற்றில் பொது சுகாதார பரிசோதகர்கள் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். அதன் போது, சுகாதார விதிமுறைகளை பின்பற்றாத உணவகம் ஒன்றிற்கும், காலாவதி கடந்த உணவுப்பொருட்களை விற்பனைக்கு வெளிக்காட்டியமை, தூசு படிந்த நிலையில் உணவுப் பொருட்களை விற்பனைக்கு வைத்திருந்தமை மற்றும் எலி எச்சங்களுடன் உணவுப் பொருட்களை களஞ்சியப்படுத்தி வைத்திருந்தமை, மனித நுகர்வுக்கு ஏற்றதல்லாத உணவு பொருட்களை விற்பனைக்கு வைத்திருந்தமை போன்ற குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் மூன்று பல்பொருள் அங்காடிகளுக்கும் எதிராக பொது சுகாதார பரிசோதகரால் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது.

வழக்கு விசாரணைகளின் போது உரிமையாளர்கள் தம் மீதான குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொண்டதை அடுத்து, உரிமையாளர்களை கடுமையாக எச்சரித்த மன்று, உணவக உரிமையாளருக்கு 50 ஆயிரம் ரூபாயும், பல்பொருள் அங்காடிகளில் உரிமையாளர்களுக்கு 40 ஆயிரம் , 10 ஆயிரம் மற்றும் 60 ஆயிரம் ரூபாயும் தண்டம் விதித்தது.

## ஐ.நா. உயராணையரின் அறிக்கையை செம்மணியில் போட்டு எரித்தது தவறு

### தமிழ் அரசுக் கட்சித் தலைவர் கண்டனம்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உயராணையரின் இலங்கை தொடர்பான அறிக்கை தமக்கும் ஏமாற்றமளித்திருப்பதாகத் தெரிவித்த இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் சிவஞானம், இருப்பினும் அதனை எரித்தது தவறு என்றும் கண்டித்தார்.

தமிழ் மக்களுக்கு பன்னாட்டு நீதி வேண்டும் என்று வலியுறுத்தி செம்மணியில் நடத்தப்பட்ட பட்டினிப் போராட்டத்தின் கடைசி நாளில் ஐ.நா. உயராணையரின் அறிக்கை தீயிட்டு எரிக்கப்பட்டது. இது தொடர்பில் யாழ்ப்பாணத்தில் நேற்றுச் செய்தியாளர்களிடம் பேசிய சிவஞானம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உயராணையரின் அறிக்கை தொடர்பாக கட்சி ரீதியாக நாங்கள் எமக்கு ஏற்பட்ட அதிர்ச்சியையும் ஏமாற்றத்தையும் ஏற்கனவே தெரிவித்திருக்கிறோம்.

எங்களுடைய கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறீதரன் ஏற்கனவே ஜெனிவாவுக்குப் போயிருக்கின்றார். அவர் தனிப்பட்ட ரீதியாக போயிருந்தாலும் எங்களுடைய கட்சியின் உறுப்பினர் அவர். தனிப்பட்டதாகவும் இலங்கை தமிழ் அரசுக் கட்சி சார்ந்த நிலைப்பாடாகவுமு அவரது பயணத்தை நான் பார்க்கின்றேன். அவர் கூடுதலாக பக்க நிகழ்வுகளில் பங்கேற்பார் என நம்புகிறேன்.

ஐ.நாவின் அறிக்கைகளை ஏமாற்றம் என்றே நாமும் சொல்கிறோம். அதற்காக அந்த அறிக்கைகளை எதிர்க்கப்போவதில்லை. எதிர்க்கின்றோம் என்று சொல்லிவிட்டு நாங்கள் எவ்வாறு அவர்களிடம் செல்லமுடியும்? அதுபோன்றே அந்த அறிக்கையை எரித்துவிட்டு நாங்கள் அவர்களிடம் சொல்ல முடியாது.

ரணில் விக்ரமசிங்க, கடந்த காலங்களில் சந்திரிகாவின் அரசியல் தீர்வு வரைவை நாடாளுமன்றத்துக்குள் வைத்து எரித்தார். அதுபோன்றே இப்போது ஐ.நா. அறிக்கையையும் எரிக்கிறார்கள். எங்கள் விடயத்தில் கூடுதல் அக்கறை எடுக்க வேண்டியது பன்னாட்டுச் சமூகம்தான். அதிலும் மிக முக்கியமான பங்கு இந்தியாவிற்கு உண்டு. இந்திய இலங்கை ஒப்பந்தத்தை செய்ததன் மூலமே அந்த பங்கு அவர்களுக்கு கிடைக்கிறது.

பொதுவாக இந்திய தரப்பு சொல்வது, அண்மையில் இந்திய தூதர்கூட சொல்லி இருந்தார். நாங்கள் ஒற்றுமைப்படவேண்டும் என்று. அதை நாங்கள் செய்வோம்.

13ஆம் திருத்தத்தை முழுமையாக அமுல் செய்வது வேண்டுமென்பதில் நாங்கள் எல்லோரும் ஒற்றுமையாகத்தான் இருக்கிறோம். விசுவாமித்திரர் வரம் கொடுத்தது போல நாம் கேட்க தேவையில்லை. சைக்கிள் கட்சி மாத்திரமே அதற்கு உடன்படவில்லை. ஏனைய அனைத்துக் கட்சிகளும் ஒன்றாகத்தான் இருக்கிறார்கள்.

இந்தியா எங்கள் நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்டு 13ஆம் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த கேட்கிறோம். இந்தக் கோரிக்கையில் சைக்கிள் கட்சியைத் தவிர மற்றைய தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒற்றுமையாகத்தான் இருக்கின்றன. அப்படியிருக்கையில் இந்தியா ஒற்றுமைப்படுங்கள் ஒற்றுமைப்படுங்கள் என்று சொல்வதில் பொருள் இல்லை - என்றார்.


வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன்
2 பரப்பு வயல்க்காணி
B – 2 பரப்பு மேட்டுக்காணியும்
2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)
C – 2 பரப்பு மேட்டுக்காணி
பிரதான வீதியுடன்
0777 43 55 57


Study
MBBS
in China
SLMC APPROVED
Dalian Medical University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDr
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION
OPEN
CONTACT US
FOR ADMISSION
0701348384

காலைக்கதிர் Kalaikkathir


# உங்கள் கனவை நனவாக்க ...!

## NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722





இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.09.2025இல் வெளியிடப்பெற்றது